**சிலாபம் நகர சபை - 2022**

---------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

சிலாபம் நகர சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள், ஏனைய விளக்கத் தகவல்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 181(1) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்த்து சிலாபம் நகர சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாகும்.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1)ஆம் உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது சபையின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,
- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது சபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதா,
- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,
- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா,

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடு தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடு உள்ளடக்கப்பட்டுள்ளது

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டிற்காக மதிப்பீட்டினை மிகைத்து கிடைத்திருந்த முத்திரை கட்டண பெறுமதி ரூபா 2,802,186 கணக்குகளில் செம்மையாக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளில் செம்மையாக்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நாட்குறிப்பின் மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | முன்னைய ஆண்டில் கடன்பட்டோராக்கப்பட்ட மீளாய்வாண்டில் செலுத்திய ரூபா 64,755 தொகையான ஓய்வூதியப் பணமானது ஓய்வூதிய பங்களிப்புக் கணக்கிற்கு செம்மையாக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | அலுவலக காணியில் ஓய்வு அறையினை நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்காக ஒப்பந்தக்காரருக்கு செலுத்த வேண்டியவை ரூபா 670,250 ஆல் அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் ஏற்படாமைக்காக நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |

#### 1.6.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்கு அல்லது அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 05 கணக்கு விடயங்களில் நிதிக்கூற்றுக்களுக்கும் பட்டோலைகளுக்குமிடையே ரூபா 22,287,365 கூட்டு மொத்தப் பெறுமதியான வித்தியாசம் காணப்பட்டது. | வித்தியாசத்தினை 2023 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பதிவேடுகளை சரி செய்து சரியான மீதியை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

#### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை

| வழங்கப்படாத கணக்காய்வு சான்றுகள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 385,087,579 பெறுமதியான 07 கணக்கு மீதிகளை நாளதுவரையாக்கிய நிலையான சொத்துக்கள் பதிவேடு, முற்பணக் கொடுப்பனவு பதிவேடு, விபரமான பட்டோலை என்பன சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிக்க முடியாதிருந்தது. | 2023 இறுதிக் கணக்குகளில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நாளதுவரையாக்கிய நிலையான சொத்துக்கள் பதிவேடு, மற்றும் பட்டோலைகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

### 1.7 இணக்கமின்மைகள்

#### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்னைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலிவற்றுடனான தொடர்புகள் | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| (அ) | நகர சபை கட்டளைச் சட்டத்தின் 170 ஆம் பிரிவு | 01 ஆண்டிற்கும் மேற்பட்ட காலமாக நிலுவையாகக் காணப்படும் வீதவரி மற்றும் நிலுவையான குத்தகை வாடகைகள் சம்பந்தமாக கட்டளைச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வார்ணாமம் வழங்கப்பட்டு மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவைப் பணத்தை அறவீடு செய்வதற்கு துரித நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 1975 உள்ளூராட்சி சேவைகள் ஓய்வூதிய கட்டளை மற்றும் 1978 யூன் 07 ஆந் திகதிய 320/8 ஆம் இலக்க அரசாங்கத்தின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திருத்திய உள்ளூராட்சி ஓய்வூதிய கட்டளையின் 36 ஆம் பிரிவு | முறையாக மாதாந்த ஓய்வூதிய பங்களிப்பு பணம் செலுத்தப்பட்ருக்கவில்லை. | எதிர்காலத்தில் நிலுவைப் பணத்தை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முறையாக நாளாந்த மாதாந்த ஓய்வூதிய பங்களிப்பு பணம் செலுத்தப்படுதல் வேண்டும். |

#### 1.7.2 வரித் தேவைப்பாடுகளுடனான இணக்கமின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| பெறுமதி சேர் வரி கணக்கிலுள்ள ரூபா 2,882,489 வரவு மீதி சம்பந்தமாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஆலோசனையைப் பெற்று தேவையான தீர்த்துவைத்தல்கள் செய்யப்பட்டிருக்கவில்லை. | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் கலந்துரையாடி அந்த நிறுவனம் வழங்கும் பதிலுக்கு இணங்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | இறைவரித் திணைக்களத்திடமிருந்து ஆலோசனையை பெற்று தேவையான தீர்த்துவைத்தல்கள் செய்யப்படுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 10,554,339 ஆக இருந்ததுடன் அதற்கு நெரொத்த வகையில் முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 30,322,519 ஆகும்.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| வருமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| வீத வரியும் வரியும் | 23,688 | 23,479 | 12,861 | 51,260 | 22,453 | 23,162 | 17,628 | 50,868 |
| வாடகை | 45,631 | 41,638 | 35,836 | 47,957 | 45,727 | 35,041 | 34,105 | 38,102 |
| அனுமதிப்பத்திர கட்டணம் | 1,406 | 15,441 | 15,441 | - | 1,525 | 2,647 | 2,647 | - |
| ஏனைய வருமானம் | 3,454 | 10,126 | 5,710 | - | 24,000 | 23,788 | 23,593 | 93,980 |
| | ....... | ......... | ......... | ........... | ......... | ......... | ........ | ........... |
| மொத்தம் | 74,179 | 90,684 | 69,848 | 99,217 | 93,705 | 84,638 | 77,973 | 182,950 |
| | ......... | ......., | ........ | ........... | ........ | .......... | ......... | ........... |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) **வீதவரி**<br>வீதவரி அறவிட வேண்டிய ஆதனங்களிலிருந்து ரூபா 51,259,586 தொகையான வீதவரிப் பணம் அறவிட வேண்டி இருந்தது. | நடமாடும் சேவை நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதன் மூலம் நிலுவையான வீதவரிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவையான வீதவரிகளை துரிதமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) **வாடகை**<br>நிலுவையான கடை வாடகை மற்றும் குத்தகை வாடகை வருமானம் ரூபா 47,957,115 ஆக இருந்ததுடன் இந்த நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | உள்ளூராட்சி ஆணையாளரின் ஆலோசனைக்கு இணங்க நிலுவைப் பணத்தை அறவீடு செய்தல் அல்லது பதிவழித்தல் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவையான கடை வாடகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) சபை ஊழியர்களை ஈடுபடுத்துவதன் மூலம் மீன்சந்தை, மரக்கறி சந்தை, இரவுச் சந்தை, வாகன தரிப்பிடங்கள், மலசல கூடம் என்பவற்றிலிருந்து வருமானம் | கேள்வி கோரி வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வருமானத்தை அதிகரிக்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சேகரிக்கப்பட்டிருந்ததுடன் அதன் போது சேகரிக்கப்பட்ட வருமானத்தில் சம்பளம் மற்றும் மின்சாரத்திற்கான செலவுகளைக் கழித்ததன் பின்னர் வருமானத்தை மிகைத்த செலவுகள் காணப்பட்டது என்பது அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | சேர்லி கொரயா மண்டபம் 2017 ஆம் ஆண்டின் போது சிலாபம் வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் அது சம்பந்தமாக எதுவித உடன்படிக்கையும் செய்து கொள்ளப்படவில்லை. நகர சபையினால் அறவிட வேண்டிய வாடகைப் பணமாக ரூபா 3,434,000 கணிப்பீடு செய்யப்பட்டிருந்தும் அப்பணம் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | வைத்தியசாலைக்கு வழங்கிய கட்டிடத்தினை வழங்குமாறு நிலுவைப் பணத்தை செலுத்துமாறும் தெரிவித்து கடித்தின் மூலம் வைத்தியசாலை பணிப்பாளருக்கு தெரியப்படுத்தப்பட்டது. | வாடகைப் பணத்தை துரிதமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | சபையின் தீயணைக்கும் வாகனம் 2016 ஆம் அண்டில் தீ விபத்திற்கு உள்ளாகி ரூபா 780,000 நட்டம் ஏற்பட்டிருந்ததுடன் அது சம்பந்தமாக விசாரணைகளை மேற்கொண்டு நட்டத்தை அறவீடு செய்வதற்கு உள்ளூராட்சி ஆணையாளரினால் சிபாரிசுகள் தரப்பட்டிருந்த போதிலும் அச்சிபாரிசுகள் நடைமுறைப்படுத்தப்படவில்லை. | அந்த உத்தியோகத்தரின் மிகைக் கட்டணத்தை அறவீடு செய்யும் முறைமை தொடர்பாக அறிவுறுத்தல் கடித்தினை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதனால் அப்பணத்தை அறவீடு செய்தல் இடம்பெற்றிருக்கவில்லை. | உள்ளூராட்சி ஆணையாளரின் சிபாரிசினை துரிதமாக அமுல்ப்படுத்துதல் வேண்டும். |

**3.2 பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டில் 21 வாயுசீராக்கி இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா 2,842,210 செலவு செய்யப்பட்டிருந்தது. பொருத்தப்பட்ட வாயு சீராக்கி இயந்திரங்களை செயற்படுத்துவதற்காக போதியளவு மின்சார இயலளவு இல்லாததன் காரணமாக ரூபா 692,337 பெறுமதியான 07 வாயு சீராக்கி இயந்திரங்களை செயற்படுத்த முடியாது விளைவற்றுக் காணப்பட்டதுடன் பயன்பாட்டிற்கு எடுத்துகொள்ளப்படாத இயந்திரங்களின் உத்தரவாத காலமும் மிகைத்திருந்தது. | இந்த வாயுசீராக்கி இயந்திரங்கள் விற்கப்பட்டு சோலாபெனல் பொருத்தப்பட்டு அலுவகத்திற்கு மின்சாரத்தை வழங்குவது சம்பந்தமாக ஆலோசனைகளை வேண்டி உள்ளூராட்சி ஆணையாளரின் அலுவலகத்திற்கு கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | முறையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2021 செப்தெம்பர் 28 ஆந் திகதி விசேட மீளாய்வுச் சபையின் மூலம் வாகனங்களை பௌதீக ரீதியாக பரீட்சிப்பிற்கு உட்படுத்தி சமர்ப்பிக்கப்பட்டிருந்த மீளாய்வு அறிக்கைக்கு இணங்க கைதவிர்ப்புச் செய்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டள்ள சபையின் 05 சொத்துக்களை கைதவிர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளூராட்சி ஆணையாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டு மதிப்பீட்டு அறிக்கைக்கு அங்கீகாரம் கிடைத்தன் பின்னர் கைதவிர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்டும். | மீளாய்வுச் சபை அறிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | சபையின் அதிகாரப் பிரதேசத்திலுள்ள சபையினால் பயன்படுத்தப்படுகின்ற காணிகள், விளையாட்டு மைதானங்கள், மற்றும் மயானங்களின் 39 காணிகள் காணப்பட்டதுடன் அக்காணிகளின் உரிமையை பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணிகளைப் பொறுப்பேற்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | துரிதமாக காணிகளின் உரிமையை பொறுப்பேற்பதற்கு நடவடிக்கைஎடுத்தல் வேண்டும். |

**3.4 மனிதவளங்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| சபையினால் 118 ஊழியர்கள் பற்றாக்குறையாகவும் 14 ஊழியர்கள் மிகையாகவும் காணப்பட்டனர். | வெற்றிடங்களை நிரப்புவதற்காக அடிக்கடி வேண்டுதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | உரிய வெற்றிடங்கள் முறைப்படியாக பூரணப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்.**

**4.1 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2022 ஆம் ஆண்டிற்காக உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தும் கட்டிடங்களை உள்ளடக்கிய சொத்துக்களின் முகாமைத்துவம், வருமானங்களை உழைத்தல், பொதுமக்களுக்கு சேவை வழங்குதல், களஞ்சிய முகாமைத்துவம், தெரு விளக்குகளைப் பராமரித்தல் முதலிய துறைகளில் உள்ளகக் கட்டுக்காட்டு பலவீனத்தை இனங்காணக்கூடிய வகையில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்விற்கு உட்படுத்தப்படாத துறைகளை 2023 ஆம் ஆண்டில் முடியுமான அளவிற்கு கணக்காய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அனைத்து பிரிவுகளையும் உள்ளடக்கும் வகையில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

**4.2 பாதீட்டுக் கட்டுபாடு**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | நடைமுறைச்சாத்தியமாகவும் சரியாகவும் பாதீடு தயாரிக்கப்படாமையின் காரணமாக 81 செலவு விடயங்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 8,233,600 நிதி ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது. | நகரசபையினால் செயற்திட்ட பாதீடு தயாரிக்கப்படுவதனால் ஒவ்வொரு செயற்திட்டத்தின் செலவுத் தலைப்புக்காக நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்படும். | பாதீடு செய்யப்பட்ட செயற்பாடுகளை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் 43 செலவு விடயங்களுக்காக வழங்கப்பட்ட ரூபா 14,269,400 நிதி ஏற்பாட்டுப் பணத்தில் 50 சதவீதத்திலிருந்து 98 சதவீதம் வரையான பணம் சேமிக்கப்பட்டிருந்தது. | பொருளாதார பிரச்சினை மற்றும் தேசிய பாதீட்டு சுற்றிக்கைக்கு இணங்க செலவுகளை கட்டுப்படுத்த வேண்டி ஏற்பட்டது. | பாதீடு செய்யப்பட்ட செயற்பாடுகளை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4.3 நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 15 நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக இனங்காணப்பட்ட 13 செயற்பாடுகள் முழுமையாக நிறைவேற்றப்பட்டிருக்காததுடன் 19 செயற்பாடுகளின் செயல்முன்னேற்றம் 0.06 சதவீதத்திலிருந்து 95.06 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | பொருளாதாரப் பிரச்சினை மற்றும் தேசிய பாதீட்டு சுற்றிக்கைக்கு இணங்க செலவுகளை கட்டுப்படுத்த வேண்டி ஏற்பட்டது. | நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களையும் இலக்குகளையும் அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |